APR 2010

## சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை –திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி, பாய்க்காரத்தெரு வெண்ணாற்றின் குறுக்கே போக்குவரத்து பாலம் கட்டும் பணி–நெடுஞ்சாலைத்துறை மூலம்–நூற்றுவீதக் கட்டணம் இல்லாமல் – வைப்புப்பணியாக மேற்கொள்ளுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்பி2)துறை

அரசாணை (நிலை) எண். 127 நாள். 13/04/2010

திருவள்ளுவர் ஆண்டு 2041, பங்குனி 30

படிக்கவும்:

1) அரசாணை (நிலை) எண் 189, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை நாள் 30.7.2008.
2) தலைமைப் பொறியாளர்(பொது) (கூ.பொ) நெடுஞ்சாலைத் துறை கடித எண். 8623/பாலம் 3/2009 நாள் 26.6.2009

---

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இனிவரும் காலங்களில் நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளிலுள்ள அரசு சாலைகளில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு பணிகளுக்காக நூற்றுவீதக்கட்டணம் உட்பட அரசுக்கான பங்களிப்புத்தொகையை, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிடமிருந்து வசூலிக்கத் தேவையில்லை என ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி, பாய்க்காரத் தெரு, வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ரூ.110.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதாகவும், மேற்கண்ட நிர்வாக அனுமதியில் இப்பாலம் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கிய சாலையான வடபாதிமங்கலம்–மாவூர் சாலை (MDR 14) இணையும் இடத்தில் அமைந்துள்ளதால், இப்பணியினை நெடுஞ்சாலைத்துறை மூலம் நூற்றுவீதக் கட்டணம் (Centage Charges) இல்லாமல் வைப்புப் பணியாக (Deposit Work) எடுத்துச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளார். 2008–09ன் விலை விகிதங்களின்படி மேற்கண்ட பாலம் கட்ட ரூ.125.00 இலட்சம் தேவைப்படும் என்றும், அனுமதி பெற்று ஒப்பந்தம் கோருவதற்குள் தோராயமாக 10% விலை ஏற்றத்தினை கணக்கில் கொண்டு ரூ.12 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.137.00 இலட்சம் தேவைப்படும் எனவும் மொத்த மதிப்புத்தொகை ரூ.137.00இலட்சத்தையும் கூத்தாநல்லூர் நகராட்சியே வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் பரிந்துரை செய்துள்ளதாகவும், கூத்தாநல்லூர் நகராட்சி

..2

ஆணையர் ரூ.90.37 இலட்சத்திற்கு வரைவு காசோலையாக கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவாரூர், அவர்களுக்கு வைப்புத்தொகையாக செலுத்தியுள்ளதாகவும் தலைமைப் பொறியாளர் (பொது) தெரிவித்துள்ளார்.

3. மேலும் 30.12.2008 நாளிட்ட கூத்தாநல்லூர் நகர்மன்ற தீர்மான எண் 518-ல் மேற்படி பணிக்கு ரூ.110.00 இலட்சத்திற்குமேல் கூடுதலாகும் ரூ.27 இலட்சத்தினை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் போன்ற நிதிகளிலிருந்து ஒதுக்கீடு செய்யும் தொகையிலிருந்தோ அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்தோ செலவு செய்ய தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது எனவும், பணியின் முக்கியத்துவம் கருதிபணிக்கான மொத்த செலவினத்தினையும் நகராட்சியே வழங்குவதற்கு இசைவளித்துள்ளது எனவும் குறிப்பிட்டு மேற்படி பணியினை நெடுஞ்சாலைத்துறை மூலம் வைப்புப் பணியாக நூற்றுவீதக் கட்டணம் இல்லாமல் செயல்படுத்துவதற்கு அரசின் ஆணையினை தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை, கோரியுள்ளார்.

4. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கோரிக்கை அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தலைமைப் பொறியாளரின் கோரிக்கையை ஏற்று, திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாய்க்காரத்தெருவில் வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியினை நெடுஞ்சாலைத்துறை மூலம் நூற்றுவீதக் கட்டணம் இல்லாமல் வைப்புப் பணியாக செயல்படுத்துவதற்கு அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அசா.குஎண். 3513/பொ.ப.1/2010 நாள் 1.3.2010 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ சந்தானம்
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பொது)
நெடுஞ்சாலைத்துறை, சென்னை-5
மாவட்ட ஆட்சித்தலைவர், திருவாரூர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை-18/35
சம்பள கணக்கு அலுவலர் சென்னை-35
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை-5
நகராட்சி ஆணையர்,கூத்தாநல்லூர்,திருவாரூர் மாவட்டம்.

நகல்:
மாண்புமிகு அமைச்சர்(நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9
நிதி(பொதுபணி)துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9
இ.கோ / உதிரிகள்

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்